# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 155/11 — 1975 මාර්තු 19 වැනි බදාදා — 1975.03.19

155/11 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(49)/75.

(40 ஆம் அத்தியாயமான்) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

கொழும்பு,
1975, மார்ச்சு 19.

ஒழுங்குவிதி

நீதியமைச்சரின் செயலாளர், ஏதேனும் மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு முகவரியிட்ட எழுத்திலான கட்டளை மூலம்—

(அ) மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் அல்லது அவற்றுளெவையேனும் ; அல்லது

(ஆ) அந்தக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் அல்லது அவற்றுள் எவையேனும்—

(1) அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்பட்டிருப்பவரும் அத்தகைய மறியற்சாலையில் வைத்திருக்கப் படுபவருமான எல்லா வகை மறியற்காரருக்கும் அல்லது எவ்வகை மறியற்காரருக்கும் அல்லது

(2) அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்பட்டிருப்பவரும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய மறியற்சாலையில் சட்டப்படியான பாதுகாவலில் வைத்திருக்கப்படுபவர்களுமான எல்லா வகை ஆட்களுக்கும் அல்லது எவ்வகை ஆட்களுக்கும்—

ஏற்புடையனவாதலாகாதென்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய திரிபுகளுக்கமைய ஏற்புடையனவாதல் வேண்டுமென்று பணிக்கலாம்.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.